பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

11 12 2025 7 15

வியாழக்கிழமை காலை

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புதுதில்லியில் இத்தாலி துணைப் பிரதமர் திரு. Antonio Tajani உடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இருதரப்பு உறவு குறித்து விவாதித்தார்.

2. அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை காரணமாக ரயில் சரக்குப் போக்குவரத்து அதிகரித்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. இண்டிகோ விமான சேவைகள் குறித்து கண்காணிக்க விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் 8 பேர் கொண்ட மேற்பார்வைக் குழுவை நியமித்துள்ளது.

4. நாட்டின் மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு பிராந்தியங்களில் அடுத்த 3 நாட்களுக்கு தொடர்ந்து குளிர் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியா இன்று பிரேசிலை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இத்தாலி துணைப் பிரதமர் திரு. Antonio Tajani புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின்போது இரு நாடுகளுக்கு இடையே அடுத்த 5 ஆண்டுகளுக்கான திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக இருதரப்பும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு, ஆராய்ச்சி, புதுமைக் கண்டுபிடிப்பு, பாதுகாப்பு, விண்வெளி, போக்குவரத்து, தீவிரவாதத்தை எதிர்கொள்ளுதல், கல்வி மற்றும் இருநாட்டு மக்களிடையேயான தொடர்பு குறித்து இரு தலைவர்களும் விரிவாக விவாதித்தனர்.

இத்தாலி துணைப் பிரதமருடனான இந்த சந்திப்பு தமக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும், இரு நாடுகளுக்கிடையேயான நட்புறவு தொடர்ந்து வலிமையடைந்து இரு நாட்டு மக்களும், உலக சமூகமும் பயனடைந்து வருவதாக பிரதமர் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக பிரதமர் திரு. மோடி, இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தொலைபேசி வாயிலாக உரையாடினார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்த இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

தீவிரவாதத்தை எந்த நிலையிலும் கண்டிப்பதாக கூறினார்கள்.

மேற்கு ஆசியாவில் நிலவும் சூழ்நிலை குறித்து தங்கள் கருத்துகளை அவர்கள் பரிமாறிக்கொண்டனர்.

காஸா அமைதித் திட்டத்தை விரைவாக அமல்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவளிப்பதாக திரு. மோடி இஸ்ரேல் பிரதமரிடம் கூறினார்.

<<<<>>>>

புதுதில்லி வந்துள்ள இத்தாலி துணைப்பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான திரு. Antonio Tajani நேற்று மாலை வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இரு நாடுகளுக்கு இடையேயான 5 ஆண்டு செயல் திட்டத்தின்கீழ், அரசியல், கடல்சார் போக்குவரத்து, தொழில்நுட்பம் மற்றும் புதுமைக் கண்டுபிடிப்பு உள்ளிட்டவை குறித்து தாங்கள் இருவரும் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை காரணமாக ரயில் சரக்குப் போக்குவரத்து அதிகரித்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், கடந்த நிதியாண்டில் ரயில்களில் ஆயிரத்து 617 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்பட்டதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாடு முழுவதும் அண்மையில் இண்டிகோ விமான சேவை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது அதன் சேவைகள் குறித்து கண்காணிக்க விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் மேற்பார்வைக் குழுவை நியமித்துள்ளது.

இதற்காக கேப்டன் விக்ரம் ஷர்மா தலைமையில் 8 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழு குருகிராமில் உள்ள இண்டிகோ விமான நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்தபடி விமானங்களின் இயக்கம், பணியாளர்களின் எண்ணிக்கை, விடுமுறை உள்ளிட்டவை குறித்து கண்காணிக்க உள்ளனர்.

நாள்தோறும் இரண்டு உறுப்பினர்கள் இப்பணியைக் கண்காணிக்க உள்ளனர்.

அத்துடன் பயணிகள் மேற்கொள்ளும் பயண ரத்து, கட்டணத்தை திருப்பிச் செலுத்தும் பணி, அன்றாட செயல்பாடு, பயணிகளுக்கான நிவாரணம் மற்றும் உடைமைகள் வினியோகம் ஆகியவை குறித்து விமானப் போக்குவரத்து இயக்குநரக தலைமை அதிகாரிகள் திரு. Aishveer Singh, திரு. Mani Bushan ஆகியோர் கண்காணிப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இண்டிகோ விமான சேவை பாதிப்பு குறித்து விமானப் போக்குவரத்துத் துறை துணைச் செயலாளர் திரு. அம்புஜ் சர்மா ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விமான சேவைகள் பயணிகளுக்கு உடைமைகளை திரும்ப அளித்தல் குறித்து தாம் ஆய்வு செய்ததாக கூறினார்.

நாடு முழுவதும் ரத்து செய்யப்பட்ட விமானங்களுக்கான பயண கட்டணமாக ஆயிரத்து 500 கோடி ரூபாயை இண்டிகோ விமான நிறுவனம் திரும்ப அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பின்னர் பேசிய சென்னை விமான நிலைய இயக்குநர் திரு. ராஜா கிஷோர், நாட்டில் கடந்த 5ஆம் தேதி இண்டிகோ விமான சேவையில் ஏற்பட்ட பாதிப்பு இயல்பு நிலைக்கு திரும்பி வருவதாக தெரிவித்தார்.

விமானங்கள் ரத்து செய்யப்பட்டபோது தில்லி செல்லக்கூடிய பயணிகள் ஏர்-இந்தியா விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாக கூறினார்.

<<<<>>>>

தமிழகம் உட்பட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன்பிரதேசங்களில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ் கணக்கீட்டுப் படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

வரைவு வாக்காளர் பட்டியல் இம்மாதம் 16ஆம் தேதி வெளியிடப்படும்.

வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்க மற்றும் நீக்குவதற்கு இம்மாதம் 16ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் 14ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது.

இதற்கிடையே எஸ்.ஐ.ஆர். பணியின்போது கண்டறிய முடியாத, காலமான மற்றும் போலி வாக்காளர்கள் குறித்த பட்டியலை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்களிடம் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்பாக எந்தவொரு தவறையும் நிவர்த்தி செய்ய முடியும் என்று கூறியுள்ளது.

<<<<>>>>

மக்களவையில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்த விவாதத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தமது கருத்தை சிறப்பாக எடுத்துரைத்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்திய தேர்தல் நடைமுறையின் பன்முக அம்சங்கள் குறித்தும், ஜனநாயகத்தின் நீடித்த வலிமை குறித்தும் உறுதியான கருத்துகளை திரு. அமித் ஷா கூறியதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு கல்வி மூலம் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே நிலையிலான கல்வி அளிக்க முடியும் என்று சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் திரு. காமகோட்டி கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு குறித்த மாநாட்டில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

(Voice Byte - Kamakoti - 58 Sec)

<<<<>>>>

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் மறுசீரமைப்புப் பணிகள் காரணமாக சில ரயில்கள் தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி தஞ்சாவூர் உழவன் எக்ஸ்பிரஸ், கொல்லம் அனந்தபுரி எக்ஸ்பிரஸ், ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்கள் இம்மாதம் 16ஆம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 3ஆம் தேதி வரை தாம்பரத்தில் இருந்து புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுமார்க்கத்தில் இந்த ரயில்கள் தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து மும்பைக்கு இயக்கப்படும் CSMT அதிவிரைவு ரயில் இம்மாதம் 16ஆம் தேதி முதல் பிப்ரவரி 3ஆம் தேதி வரை சென்னை கடற்கரை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் என்றும், மறு மார்க்கத்தில் இந்த ரயில், சென்னை கடற்கரை வரை மட்டுமே இயக்கப்படும் என்றும் தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுளது.

<<<<>>>>

நாட்டின் மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு பிராந்தியங்களில் அடுத்த 3 நாட்களுக்கு தொடர்ந்து குளிர் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு மத்தியப்பிரதேசம், விதர்பா மற்றும் சத்தீஸ்கரில் இன்றும், நாளையும் குளிர் நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

அதேபோல் தெலங்கானா, கர்நாடகா மற்றும் ஒடிசாவின் வடக்கு உள் பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு குளிர் நிலவும் என்று கூறியுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகளில் அடுத்த 7 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே தலைநகர் தில்லியில் இன்று காலை 6 மணி நிலவரப்படி காற்றின் தரக்குறியீடு 282 புள்ளிகளுடன் மோசமான நிலையில் இருந்ததாக மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியா இன்று பிரேசிலை எதிர்கொள்கிறது.

சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூவில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30க்கு தொடங்குகிறது.

--------------

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நியூ சண்டிகரில் நடைபெறும் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>